## வெலிமடை பட்டின சபை

### பட்டின சபைகள் கட்டளைச் சட்டம்

(256 ம் அத்தியாயமான) பட்டின சபைகள் கட்டளைச் சட்டத்தின் 152, 156 ஆகிய பிரிவுகளுக்கமைவாக வெலிமடைப் பட்டின சபையால் ஆக்கப் பட்டதும், அக்கட்டளைச் சட்டத்தின் 153 ம் பிரிவினுல் தமக்களிக்கப்பட்ட அதிகார பலத்தைக் கொண்டு உள்ளூராட்சி அமைச்சரால் அங்கீகரிக்கப் பட்டதுமான துணைவிதிகள்.

ஈ. ஜீ. குணவர்தன,
நிரந்தரச் செயலாளர்,
உள்ளூராட்சி அமைச்சு.

கொழும்பு, 20.10.1966.

### துணைவிதிகள்

1. (1) பின்வருவன அபாயகரமான தொழில்களாகக் கருதப்படும் :—
   1. தும்பு உற்பத்தி செய்தல் அல்லது சேகரித்துவைத்தல்
   2. கொப்பரு உற்பத்தி செய்தல் அல்லது சேகரித்து வைத்தல்
   3. ஆலையினுல் அல்லது செக்கினுல் தேங்காயெண்ணெய் உற்பத்தி செய்தல்
   4. தேங்காய்த் துருவல் உற்பத்தி செய்தல்
   5. பருத்திப் பஞ்சு, இலவம் பஞ்சு, அல்லது வைக்கோல் சேகரித்துவைத்தல்
   6. (50 கலனுக்கதிகமான தொகையில்) தேங்காயெண் ணெய் சேகரித்துவைத்தல்
   7. தண்ணீர், நீராவி அல்லது வேறு இயந்திர சக்தி உபயோகித்து வெட்டுமரம் அல்லது மரம் அறுத்தல்
   8. சாக்குப்பைகள் சேகரித்துவைத்தல்
   9. மண்ணெண்ணெய் சேகரித்துவைத்தல்
   10. மின்சார வேலைக்கடை ஒன்று வைத்தல்
   11. அச்சியந்திரசாலை ஒன்று வைத்தல்
   12. ஆபரணஞ் செய்தற்கான தாபனம் ஒன்று வைத்தல்

(2) பின்வருவன அருவருப்பான தொழில்களாகக் கருதப்படும்:—
   1. செயற்கை உரம் செய்தல்
   2. சவர்க்காரம் செய்தல்
   3. (3 அந்தருக்கதிகமாக) மாசி சேகரித்துவைத்தல்
   4. (3 அந்தருக்கதிகமாக) உப்பிட்ட மீன் சேகரித்து வைத்தல்
   5. (3 அந்தருக்கதிகமாக) கருவாடு சேகரித்துவைத்தல்
   6. (1 முழு மூடைக்கு அல்லது 4 கலன் கொண்ட 1 டப்பாவுக்கதிகமாக தொகையில்) சுண்ணும்பு சேக ரித்துவைத்தல்
   7. செயற்கை உரம் அல்லது செயற்கை உரம் செய்தற்குப் பயன்படும் பொருட்களை (மூன்று மூடைகளுக்கதிக மாகச்) சேகரித்துவைத்தல்
   8. இயந்திரங்கொண்டு கொச்சிக்காய்த்தூள் அல்லது வேறு வாசனைச் சரக்குகள் அரைத்தல்
   9. இயந்திரங்கொண்டு நெல், கோதுமை, குரக்கன் அல்லது வேறு தானியம் எதும் குத்துதல்
   10. பீடிகள் உற்பத்தி செய்தல்
   11. சுருட்டுகள் உற்பத்தி செய்தல்
   12. ஓட்டு வேலை செய்தற்காக அல்லது கடைச்சற்பட்டடை உபயோகிக்கும் வேலை செய்தற்காக ஒரு வேலைத் தலம் வைத்தல்
   13. தயர்களையும் தியுப்புக்களையும் வல்கனைற்றல் ஒட்டுதற் கான ஒரு தாபனம் வைத்தல்

(3) பின்வருவன அபாயகரமானவையும் அருவருப்பானவையு மான தொழில்களாகக் கருதப்படும் :—
   1. செங்கற்களும் ஓடுகளும் உற்பத்தி செய்தல்
   2. சுண்ணும்பு சுடுதல் அல்லது பதப்படுத்தல்
   3. வெட்டுமரம் அல்லது விறகு சேகரித்துவைத்தல்
   4. செங்கற்கள், கபுக்கற்கள், ஓடுகள், கருங்கற்கள் சேகரித்துவைத்தல்.

2. வெலிமடைப் பட்டின சபையால் ஆக்கப்பட்டு 1947, ஜூலை 18 ன் 9,737 ம் இலக்க கசெற்றிலும், 1955, ஒகத்து 5 ன் 10,824 ந் திகதிய கசெற்றிலும் பிரசுரிக்கப்பட்ட துணைவிதிகள் இத்தால் நீக்கஞ்செய்யப் படுகின்றன.

11–247—3.11.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,720

---

## கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்

1961 இன் 60 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்டபடியான (257 ம் அத்தியாயமான) கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 42 ஆம் பிரிவின் கீழ் திருகோணமலை மாவட்டத்து உப்புவெளிக் கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையினுல் ஆக்கப்பட்டு அப்பிரிவால் அவருக்கு உரித்தாக்கப்பட்ட அதிகார பலத்தைக்கொண்டு உள்ளூராட்சி அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட துணைவிதிகள்.

ஈ. ஜீ. குணவர்தன,
நிரந்தரச் செயலாளர்,
உள்ளூராட்சி அமைச்சு.

கொழும்பு, 26.9.1966.

### ஆயுள்வேத மருந்துச்சாலை சம்பந்தமான துணைவிதிகள்

1. 1961 இன் 60 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டபடியான (257 ஆம் அத்தியாயமான) கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 36 (இ) என்னும் பிரிவின்கீழ் சபையால் உப்புவெளியில் தாபிக்கப்பட்ட ஆயுள்வேத மருந்துச்சாலை, சபையால தாபரிக்கப்பட வேண்டியதுடன் 1961 இன் 31 ஆம் இலக்க ஆயுள்வேதச் சட்டத்தின்கீழ் பதிவு பெற்ற ஒரு ஆயுள்வேத வைத்தியரின் பொறுப்பில் இருக்கவும் வேண்டும்.

2. துணைவிதி 1 இல் சொல்லப்படும் ஆயுள்வேத வைத்தியர் அல்லது சபையால் அதற்கென அதிகாரமளிக்கப்படும் வேறு உத்தியோ கத்தர் எவரும் சபையால் அங்கீகரிக்கப்படும் அதே படிவத்திலும் அதே முறையிலும், ஆயுள்வேத மருந்துச்சாலை சம்பந்தமாக சபை விதிக்கும் கணக்குப் புத்தகங்களையும் இதரபதிவு ஏடுகளையும் எழுதி வைத்தல் வேண்டும்.

3. ஆயுள்வேத மருந்துச்சாலையின் தாபரிப்புக்கு வேண்டிய நிதிகளைச் சபை ஆண்டுதோறும் பொது நிதியிலிருந்து ஒதுக்கலாம். அவ்விதம் ஒதுக்கீடு செய்வதற்கு சபையின் வருடாந்தர வரவு செலவுத் திட்டத்தி லேனும் காலத்துக்குக் காலம் நிறைவேற்றப்படும் குறை நிரப்பு மதிப்பீடுகளிலேனும் நிதி வசதி செய்யப்படுதல் வேண்டும்.

4. ஆயுள்வேத மருந்துச்சாலையில் இலவச வைத்தியம் செய்யப்பட வேண்டும்.

5. ஆயுள்வேத மருந்துச்சாலையின் தாபரிப்புக்காக எவரிடமேனு மிருந்து கிடைக்கும் நன்கொடைத்தொகை எதுவும் அந்த மருந்துச் சாலையின் செலவுகளுக்குப் பயன்படுத்தப்படல் வேண்டும்.

6. டிசெம்பர் 31 இல் முடியும் ஒவ்வொரு ஆண்டினதும் இறுதியில் ஆயுள்வேத மருந்துச்சாலையின் அவ்வருடத்து வரவு செலவுகளைக் காட்டும் அறிக்கை யொன்று தயாரிக்கப்படத் தலைவர் ஏற்பாடு செய்தல் வேண்டும்.

7. இத்துணைவிதிகளில்—

“ ஆயுள்வேத மருந்துச்சாலை ” என்பது சபையால் தாபிக்கப் பட்டுத் தாபரிக்கப்படும் ஆயுள்வேத மருந்துச்சாலை எனப் பொருள்படும்.

“ தலைவர் ” என்பது சபைத்தலைவர் எனப் பொருள்படும்.

“ சபை ” என்பது திருகோணமலை மாவட்டத்து உப்புவெளிக் கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபை எனப் பொருள்படும்.

11–197—3.11.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,720

# உள்ளூராட்சி அதிகார நிலையத் தேர்தற் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

**கண்டி மாவட்டம்**

**மெததும்பர மெதசியபத்து கிராமச் சபை**

(262 ஆம் அத்தியாயமான) உள்ளூரதிகார சபைகள் தேர்தற் கட்டளைச் சட்டத்தின் 26 (2) (அ), 35 (1) ஆகிய பிரிவுகளின்படி நியமிக்கப்பட்ட நியமன தினத்தில் மெததும்பர மெதசியபத்து கிராமச் சபையின் 4 ஆம், 5 ஆம் இலக்க வட்டாரங்களின பொருட்டான தேர்தலுக்கு வேட்பாளர்கள் முறையாக நியமிக்கப்படவில்லையென, கட்டளைச் சட்டத்தின் 35 (2) ஆம் பிரிவின்கீழ் இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

ஈ. எவ். டயஸ் அபேசிங்க,
தேர்தல்கள் அதிகாரி.
(உள்ளூர்ச் சபைகள்)

கொழும்பு, ஒற்றோபர் 10, 1966.

11–231—3.11.66 ந் திகதிய வர்த்தமானி இல 14,720

# நானாவித அறிவித்தல்கள்

**சாவகச்சேரி நகர சபை**

**இறை வரி இடாப்பு—1966**

சாவகச்சேரி நகர சபையின் 1966 ம் வருட இறை வரி இடாப்புகள் தற்பொழுது தயாராக இருக்கின்றனவென்றும் இவைகளைச் சபையின் அலுவலகத்தில், அலுவலக நேரத்தில் பரிசீலனைக்காக வைக்கப்பட்டு இருக்கின்றனவென்றும் (255 ம் அத்தியாயமான) நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 166 ம் பிரிவிற்கிணங்க (252 ம் அத்தியாயமான) மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 235 (1) ம் பிரிவின் பிரகாரம் இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

நகர சபை அலுவலகம்,
சாவகச்சேரி,
19.10.66.

இ. டா. சிவகுரு,
தலைவர்,
நகர சபை, சாவகச்சேரி.

11–206—3.11.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,720

**ஏருவூர் பட்டின சபை**

**பட்டின சபைகள் கட்டளைச் சட்டம், அத்தியாயம் 256**

ஏருவூர் பட்டின சபையானது, (256 ம் அத்தியாயமான) பட்டின சபைகள் கட்டளைச் சட்டத்தின் 161 ம், 163 ம் பிரிவுகளின் கீழ், மேல் வரும் அட்டவணையிற் சொல்லப்பட்டுள்ள உத்தரவுக் கட்டணங்களை அதில் விளக்கியுள்ள உத்தரவுகளின் பேரில், இந்த அறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதி தொடக்கம் விதித்துள்ளதென்பது இத்தால் பிரசித்தப்படுத்தப்படுகின்றது.

பட்டின சபைக் காரியாலயம்,
ஏருவூர், 16.10.1966.

பரீது மீராலெவ்வை,
தலைவர்,
பட்டின சபை, ஏருவூர்.

**அட்டவணை**

| உத்தரவின் தன்மை | வருடாந்த உத்தரவுக் கட்டணம் ரூ. ச. |
|---|---|
| எக்கட்டிடத்திலேனும் இடத்திலேனும் உத்தரவுப் பத்திர அங்கீகாரம் பெற்று, ஓட்சிசனுல் அல்லது மின்னுல் காய்ச்சி ஒட்டுதலுடன் கூடிய தொழில் செய்யும் சாலை நடாத்தல் .. | 25 00 |
| விற்றற் பொருட்டு இரும்பு சேகரித்து வைத்தல் .. | 50 00 |
| விற்றற் பொருட்டு பதனிடப்பட்ட மீன் அல்லது கருவாடு எத்தொகையினையும் சேகரித்து வைத்தல் .. | 10 00 |
| புகைப்படம் பிடிக்கும் தாபனம் வைத்தல் .. | 10 00 |
| படங்களுக்கு சட்டம் போடும் இடம் வைத்தல் .. | 3 00 |

11–233—3.11.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,720

